செய்தி வெளியீடு எண். 234 நாள்: 28.04.2018

**<u>கிராம சுயராஜ்ஜியம் இயக்கம் (Gram Swaraj Abhiyan) நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் கலந்துக்கொண்டு மத்திய அரசின் கீழ் செயல்பட்டு வரும் திட்டங்களை விளக்கி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்</u>**

திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம், வயலாநல்லூர் பகுதியில் இன்று (28.04.2018) நடைபெற்ற கிராம சுயராஜ்ஜியம் இயக்கம் (Gram Swaraj Abhiyan) நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் கலந்துக்கொண்டு மத்திய அரசின் கீழ் செயல்பட்டு வரும் திட்டங்கள் 1. பிரதம மந்திரி உஜ்ஜவலா யோஜனா (எரிவாயு இணைப்பு) 2. சௌபாக்கியா (இலவச மின் இணைப்பு) 3. உஜாலா திட்டம் (LED விளக்கு) 4. பிரதம மந்திரி ஜன்தன் யோஜனா (வங்கி கணக்கு) 5. பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (காப்பீடு திட்டம்) 6. பிரதம மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா (விபத்து காப்பீடு) 7. மிஷன் இந்திர தனுஷ் (நோய் தடுப்பு) ஆகிய திட்டங்களை குறித்து மக்களுக்கு திட்ட விளக்கவுரை வழங்கி, மக்கள் அனைவரும் இத்திட்டங்கள் மூலம் 100 சதவிகிதம் பெற்று பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டார். இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளிகளுக்கு எரிவாயு இணைப்பு, எல்ஈடி பல்புகள் மற்றும் காப்பீட்டு ஆணைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் அரசு துறை சார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**